31/7/18

# நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண்.6480/ஆ2/2018 நாள் 30–07–2018

பொருள் : பயிற்சி – கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கல் பயிற்சி – திருச்செங்கோடு, வரகூராம்பட்டி, வித்யா விகாஷ் கல்வியியல் கல்லூரியின் இரண்டாமாண்டு மாணாக்கர்களுக்கு – பி.எட்., கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கல் பயிற்சி பெற அனுமதி – சார்பு.

பார்வை : திருச்செங்கோடு, வரகூராம்பட்டி, வித்யா விகாஷ் கல்வியியல் கல்லூரி முதல்வரின் கடிதம் ந.க.எண்.614/17, நாள் 10.07.2018

----

பார்வையில் காணும் கடிதத்தின்படி இரண்டாமாண்டு பி.எட்., கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கல் பயிற்சி பெறும் மாணாக்கர்கள் 188 பேர் 01.08.2018 முதல் 16 வார வேலை நாட்களுக்கு பயிற்சி பெற ஆணை வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டது.

எனவே 01.08.2018 முதல் கீழ்க்காணும் பள்ளிகளில் 16 வார வேலை நாட்கள் காலத்திற்கு பயிற்சி பெற நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. கற்றல் பணிகள் பள்ளிப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் கற்பித்தல் பயிற்சி பெறவேண்டும்.
2. தலைமை ஆசிரியரின் ஆணைப்படியும் அறிவுரைப்படியும் பயிற்சி பெறவேண்டும்.
3. கல்வித்துறை சார்ந்த உயர் அலுவலர்கள் ஆணைப்படி பயிற்சி பெறவேண்டும்.
4. பயிற்சியின்போது பிற கல்வியியல் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் / மாணவிகள் பயிற்சி பெற வரும்போது இடையூறு ஏற்படுத்தக்கூடாது.
5. தலைமையாசிரியர், பிற ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வித்துறை உயர் அலுவலர்களிடம் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும்.
6. கற்பித்தல் பயிற்சியின்போது சம்மந்தப்பட்ட மாணவன் / மாணவி எவரேனும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டால் தலைமையாசிரியர் மூலம் உடனடியாக பயிற்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்.
7. பட்டியலில் குறிப்பிட்ட பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளில் பயிற்சி பெறக்கூடாது.
8. பயிற்சி பெற மாணாக்கர்களை பள்ளிக்கு அனுப்பும்போது ஒரே பாட பயிற்சி மாணாக்கர்களை அனுப்புவது முற்றிலும் தவிர்க்கப்படல் வேண்டும்.
9. பயிற்சி மாணாக்கர்கள் பள்ளி வளாகம்/ வகுப்பறைகளில் செல்போன் உபயோகித்தல் கூடாது.
10. தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் தகுதி / நிபந்தனைகளுக்கு உட்பட்டு கற்றல் /உற்றுநோக்கல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

<u>கற்பித்தல் பயிற்சி பெறும் அரசு / ஆதிதிராவிட நல உயர் / மேல்நிலைப் பள்ளிகள்</u>

| பள்ளியின் பெயர் | அனுமதிக்கும் மாணாக்கர்கள் எண்ணிக்கை | பள்ளியின் பெயர் | அனுமதிக்கும் மாணாக்கர்கள் எண்ணிக்கை | பள்ளியின் பெயர் | அனுமதிக்கும் மாணாக்கர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| திருச்செங்கோடு (ம) | 11 | திருச்செங்கோடு (ஆ) | 12 | பள்ளிபாளையம் (ம) | 12 |
| மல்லசமுத்திரம்(ம) | 6 | நாமக்கல்(ம) | 7 | விட்டம்பளையம் | 8 |
| கந்தம்பாளையம் | 9 | தேவனாங்குறிச்சி | 9 | சித்தளந்தூர் | 7 |
| கொக்கராயன்பேட்டை | 6 | வரகூர் | 4 | மோகனூர்(ஆ) | 5 |
| மோகனூர்(ம) | 7 | வெப்படை | 8 | இறையமங்கலம் | 8 |
| குமாரபாளையம்(ம) | 2 | எலச்சிபாளையம் | 8 | மாணிக்கம்பாளையம் | 6 |
| நாமக்கல்(வடக்கு) | 8 | இராசிபுரம்–அண்ணாசாலை | 7 | கோழிக்கால்நத்தம் | 8 |
| உலகப்பம்பாளையம் | 4 | வையப்பமலை | 9 | காளப்பநாயக்கன்பட்டி (ஆ) | 3 |
| மல்லசமுத்திரம்(ஆ) | 6 | திருமலைப்பட்டி | 1 | பள்ளிபாளையம் (ஆ) | 7 |
| | | | | மொத்தம் | 188 |

முதன்மைக் கல்வி அலுவலர்,
30/07/2018 நாமக்கல்

பெறுதல் : முதல்வர், வித்யா விகாஷ் கல்வியியல் கல்லூரி, வரகூராம்பட்டி, திருச்செங்கோடு–637214.
நகல் : சம்மந்தப்பட்ட உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.